**இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனம் - 2021**

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு சங்கம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 1 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பெறுமதிகள் அண்ணளவாக ரூபாயில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | கணனி கணக்கீட்டு முறைமையின் மூலம் பரீட்சை மீதியின் பெறுமதி அண்ணளவாக ரூபாயில் காண்பிக்க முடியாதிருந்தமை மற்றும் அது தொடர்பான கணனி மென்பொருளை நிர்வகிக்கின்ற கம்பனியடன் கலந்துரையாடி மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கீழே குறிப்பிடப்படப்படுகின்ற அவதானிப்புக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள மீதி இருப்புக்களின் பெறுமதி ரூபா 323,564,606 தொகை இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இல் குறிப்பிடப்பட்ட நியதிகளுக்கு இணங்க இனங்காணப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (i) கூட்டுத்தாபனத்தின் 03 களஞ்சியங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள 19 மருந்து விற்பனை சாலைகளில் காணப்பட்ட பூர்த்தியான மருந்து இருப்புக்களின் கிரயத்தை கணிப்பிடுவதற்காக நியமத்தின் 25 ஆம் பந்தியில் காணப்படுகின்ற நியதிகளுக்கிணங்க பேணிச் செல்லப்பட்ட இருப்பு பேரேட்டை நாளதுவரையாக்காமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி மருந்துகளின் மிகுதி இருப்புக்களின் உள்ளபடியான கிரயத்தை கணிப்பிட முடியாதிருந்தது. அதன் காரணமாக பேணிச் செல்லப்பட்ட இருப்பு பேரேட்டில் காணப்படுகின்ற மிகுதி இருப்புக்களின் எண்ணிக்கை மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்திக் கிரயத்திலிருந்து அதிகரித்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி பூர்த்தி மருந்து இருப்புக்களின் பெறுமதி ரூபா 129,032,821 ஆக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இருப்பு பேரேடு கணனி மயப்படுத்தாமையினால் ஆண்டின் இறுதியில் எஞ்சிய இருப்புக்களின் கிரயத்தை கணிப்பிடுவதற்காக அதில் அதிக ஊழியக் கிரயங்களை செய்வதற்கு ஏற்பட்டிருந்தமை மற்றும் சரியான தன்மை குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை, எதிர்காலத்தின் போது இருப்பு பேரேட்டை கணனி மயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றமை மற்றும் இருப்பு கிரயத்தில் ஏதாவது பெறுமதி சேர்க்கப்படாதிருந்தமை மற்றும் அந்த தவறுகள் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே பூர்த்தி மருந்துகள் களஞ்சியங்களில் மிகுதியாக காணப்பட்ட 38,868 மருந்து போத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூபா 4,417,736 மற்றும் 10 வகையான மருந்துகளுக்குரிய 5,499 மருந்து அலகுகளின் கிரயம் என்பன 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எஞ்சிய இருப்பின் பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ii) | காலாவதியான 04 பூர்த்தி மருந்துகளுக்குரிய 1,623 மருந்து அலகுகளின் கிரயம் கணிப்பிடப்பட்டு இழக்கப்பட்ட மற்றும் காலாவதியான பூர்த்தி மருந்து இருப்புக்களில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் மூலிகை மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்களுக்கு உரிய இழப்பீடுகள் இருப்புக் கிரயத்தில் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறு இழக்கப்பட்ட மற்றும் காலாவதியான இருப்புக்களின் கிரயத்தை கவனத்தில் கொள்ளுமிடத்து காலாவதியான இருப்பு மீதி மேலும் அதிகரிக்கும். | காலாவதியான பூர்த்தி மருந்து, மூலிகை மூலப்பொருட்கள் மற்றும் பொதியிடல் பொருட்களின் கிரயம் சரியாக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (iii) | 05 மூலிகை மூலப்பொருட் களஞ்சியங்கள், 03 பூர்த்தி மருந்துக் களஞ்சியங்கள், 03 பொதியிடல் பொருள் களஞ்சியங்கள் மற்றும் 12 பூர்த்தி மருந்து விற்பனைச் சாலைகள் என்பவற்றின் பௌதீக இருப்பு மெய்மையாய்வு 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் மற்றும் பின்னர் மேற்கொள்ளப்பட்டமையால் தேவையான சீராக்கங்கள் மேற்கொண்டு 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சிய இருப்புக்களின் அளவு சரியாக கணிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>யாழ்ப்பாணம், பேருவளை மற்றும் விஜேராம விற்பனை நிலையங்களின் பௌதீக இருப்பு மெய்மையாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட கிரயம் ரூபா 8,127,355 பூர்த்தி மருந்துகள், கிரயம் ரூபா 1,262,938 ஆன 16 மூலிகை மூலப்பொருட்கள் மற்றும் கிரயம் கணிப்பீடு செய்யப்படாத பௌதீக இருப்பு மீதி கிலோகிராம் 2,734 ஆன 02 மூலிகை மூலப்பொருட்களின் இருப்பு பற்றாக்குறை மற்றும் கிரயம் ரூபா | இருப்பு பேரேடு கணனி மயப்படுத்தாமையினால் ஆண்டின் இறுதியில் மிகுதியாகவுள்ள இருப்புக்களின் கிரயத்தை கணிப்பிடுவதில் வசதியீனமாக இருந்தமை, எதிர்காலத்தின் போது இருப்பு பேரேட்டை கணனி மயப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றமை மற்றும் அதுவரை இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகைகளை கணக்கீடு செய்ய முடியாமையால் இருப்பு பற்றாக்குறைக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படுகின்றது. | சிறந்த நடைமுறை யொன்றை பின்பற்றி திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதி இருப்புக்களின் சரியான கிரயத்தை கணிப்பிடுதல் வேண்டும். பௌதீக இருப்பு மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப் பட்ட இருப்பு பற்றாக்குறை மற்றும் மிகைகளின் கிரயம் சரியாக கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2,425,139 ஆன 29 மூலிகை மூலப்பொருள் இருப்புக்களின் மிகை என்பன 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதி இருப்புக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | காகிதாகிகள் இருப்பு பேரேட்டை நாளதுவரையாக்காதிருந்த மையால் மீளாய்வாண்டில் உள்ளபடியான காகிதாகிகளில் நுகரப்பட்ட 512 விடயங்களுக்குரிய 525,293 அலகுகளான காகிதாகிகளின் உள்ளபடியான கிரயம் மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதியான காகிதாகிகளின் இருப்பின் உள்ளபடியான கிரயத்தை கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதி காகிதாகிகளின் இருப்பின் கிரயம் ரூபா 3,431,501 இற்கு மீளாய்வாண்டின் போது காகிதாகிகள் கொள்வனவுக் கிரயம் ரூபா 1,743,072 சேர்க்கப்பட்ட பெறுமதி ரூபா 5,174,573 ஆக இருந்த போதிலும் அந்த பெறுமதியை விஞ்சி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மிகுதி காகிதாகிகளின் இருப்பின் கிரயம் ரூபா 6,346,167 ஆக கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 1,171,594 நிறுத்தி வைக்கப்பட்ட இலாபத்தில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி காகிதாகிகள் இருப்பின் கிரயம் ரூபா 6,346,167 ஆக கணிப்பீடு செய்யப்பட்டிருக்கும் போது மிகுதி காகிதாகிகளின் 45 இருப்பு விடயங்களுக்குரிய காகிதாகிகளின் 23,459 அலகுகளின் உள்ளபடியான கிரயம் இனங்காணப்படாமல் அலகொன்று ஒரு ரூபா வீதம் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையும் பௌதீக மீதியொன்று காணப்படாதிருந்த 02 காகிதாகி அலகுகளின் கிரயம் ரூபா 6,500 மிகுதி இருப்பின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தமையும், காகிகதாகிகளின் 2,041 அலகுகளின் கிரயம் இருப்பில் உள்ளடக்கப் படாதிருந்தமையும், 06 விடயங்களுக்குரிய பயன்படுத்த | இது தொடர்பாக மேலும் பரீட்சித்து சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காகிதாகிகள் இருப்பு பேரேட்டுகளில் அலகுகளின் விலை மற்றும் பெறுமதி நிரலை நாளதுவரையாக்கி ஆண்டின் போது நுகரப்பட்ட உள்ளபடியான காகிதாகிகளின் இருப்பின் கிரயம் மற்றும் ஆண்டின் இறுதியில் மிகுதியான காகிதாகிகளின் இருப்பின் உள்ளபடியான கிரயம் என்பவற்றை கணிப்பிட்டு கணக்கீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முடியாத காகிதாகிகளில் 57 அலகுகளின் கிரயம் கணிப்பீடு செய்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையும் மேலும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | | |
| (v) | நியமத்தின் 28 ஆம் பந்தியின் பிரகாரம் சுவை மருந்து உற்பத்திக்காக ஈடுபடுத்தப்படுகின்ற தங்கங்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான எஞ்சிய இருப்பின் கிரயமோ அல்லது தேறக்கூடிய பெறுமதியோ இதில் குறைந்த பெறுமதி கணக்கீடு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக நடவடிக்கை எடுத்து அவற்றின் சந்தைப் பெறுமதி ரூபா 15,400,257 ஆக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் நடைமுறையல்லா சொத்துக்களின் மீள்மதிப்பீடாக கருதி ரூபா 4,341,879 மிகையொன்று இனங்காணப்பட்ட மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் சேர்த்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் கடந்த பல ஆண்டுகளாக இந்த முறைமை பின்பற்றப்பட்டதன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 13,558,612 மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் இனங்காணப்பட்டிருந்தது. | தங்க இருப்பின் கிரயத்தை கண்டறிவதற்கு வசதியீனமாக இருந்தமையால் 2012 ஆம் ஆண்டின் போது அதன் சந்தைப் பெறுமதி மதிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்த பெறுமதி தேறக்கூடிய பெறுமதியாக கருதி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | நியமத்தின் 28 ஆம் பந்தியின் பிரகாரம் எஞ்சிய இருப்பின் கிரயம் அல்லது தேறிய தேறக்கூடிய பெறுமதி இதில் குறைந்த பெறுமதி கணக்கீடு செய்ய வேண்டியிருந்தமையால் 2012 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி கிரயமாக கருதி கணக்கீடு செய்ய வேண்டியிருந்ததுடன் அதன் பின்னைய ஆண்டுகளில் தேறிய தேறக்கூடிய பெறுமதியை கவனத்தில் கொண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டிய பெறுமதி தீர்மானிக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2021 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 113,965,665 தொகையான கடன்பட்டோர் மீதியில் 97 சதவீதம் அதாவது ரூபா 111,006,467 தொகை மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்த போதிலும் 05 வருடங்களுக்கு முன்னிருந்து நிலுவையாக காணப்பட்ட ரூபா 2,539,237 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவிடுவதற்கு முடியாதிருந்தது. அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் ரூபா 287,682 அதாவது 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோரிலிருந்து 0.25 சதவீதம் மாத்திரம் ஐயக்கடனுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 14(ஆ) ஆம் | ஐயக்கடன் ஒதுக்கீட்டு சதவீதம் எதிர்காலத்தில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடனை அறவிடுவதற்கு முடியாமைக்கான ஆபத்தினை மதிப்பீடு செய்து அதற்கு ஒப்பீடாக ஐயக்கடனுக்கான ஒதுக்கீட்டு சதவீதம் தீர்மானிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்று நிதிக்கூற்றுக்களில் மிகவும் நம்பிக்கை வாய்ந்த தகவல்களை வழங்குவதற்காக தேவையான சந்தர்ப்பங்களின் போது கணக்கீட்டு கொள்கை மாற்றப்பட முடியுமாகவிருந்த போதிலும் ஆபத்திற்கு ஒப்பிடும் போது ஐயக்கடனுக்கான ஒதுக்கீட்டுக் கொள்கை மாற்றப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் 14(அ) மற்றும் (ஆ) பந்திகளில் காண்பிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கு முரணாக முன்னைய ஆண்டில் பின்பற்றப்பட்ட இருப்பு மீள் கணிப்பீட்டுக் கொள்கை மீளாய்வாண்டின் போது மாற்றப்பட்டிருந்தது. மேலும் மருந்து விற்பனை சாலைகளில் பூர்த்தி மருந்து இருப்பு பேரேட்டில் முதல் பெறுவனவுகள் முதல் விநியோகித்தல் முறைமையில் பேணிச் செல்லப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய பூர்த்தி மருந்து இருப்புக்கள் சராசரிக் கிரய முறையை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு செய்து கணக்கீடு செய்யப்பட்டமைக்கான பிழையான கூற்று நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களை மிகவும் நம்பிக்கையான தகவல்களை வழங்குவதற்காக இருப்பு மீள்மதிப்பீட்டு கொள்கை மாற்றப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக கிரயம் ரூபா 36,631,967 ஆன 14 வாகனங்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரமான மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத்தை மதிப்பீடு செய்தல் தொடர்பாக மோட்டார் வாகன போக்குவரத்துத் தணைக்களத்தின் உதவியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | - மேற்படி - |
| (ஊ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் ஆயுட்கால முறைமை (Actuarial method) பயன்படுத்தி தொழில்தகைமை கணக்கீட்டு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் பிரகாரம் 2018 திசெம்பர் | நிறுவனத்தில் காணப்படுகின்ற நிதி நிலைமையின் அடிப்படையில் பணிக்கொடைகளை கணிப்பிடுவதற்காக வெளித்தரப்பினர் ஈடுபடுத்த முடியாதிருந்தமை, சராசரி முறைமையின் பிரகாரம் அடிப்படைச் | இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் ஆயுட்கால எண்ணிக்கை முறைமை |

| | | |
|---|---|---|
| 31 இல் உள்ளவாறு ஈடுபட்டிருந்த 383 உத்தியோகத்தர்களை அடிப்படையாகக் கொண்டு ரூபா 40,174,665 தொகை பணிக்கொடைக்காக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் வேறு முறைமைகள் பின்பற்றப்பட்டமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 16,950,449 இனை விஞ்சி ரூபா 6,883,348 பணிக்கொடைப் படியாக செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. மேலும் ஒரு வருட சேவைக்காலத்தை பூர்த்தி செய்யாதிருந்த மீளாய்வாண்டின் போது சேவைக்கு சேர்க்கப்பட்டிருந்த 32 ஊழியர்களுக்காக ஓய்வூதியப் பணிக்கொடையாக ரூபா 649,488 ஒதுக்கப்பட்டிருந்தது. | சம்பளம் மற்றும் வாழ்க்கைச் செலவுப் படிகளை சேர்த்து கிடைக்கின்ற பெறுமதியை இரண்டால் வகுத்து ஊழியர் எண்ணிக்கையை அதிகரித்து அப்பெறுமதி ஊழியர் பணிக்கொடை ஒதுக்கத்திற்காக பெறப்படுகின்றமை மற்றும் மேலும் காணப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக ஆய்வு செய்து மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | (Actuarial method) தொடர்ச்சியாக பயன்படுத்தி வருடாந்த பணிக் கொடைக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப படல் வேண்டும். |

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான 05 வருட காலத்திற்காக பட்டியல்கள் கிடைத்திருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பணமாக தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வுக் கட்டணம் ரூபா 6,001,200 ஆகும். 2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,200,000 உடன் அத்திகதியில் செலுத்த வேண்டிய மொத்தக் கணக்காய்வுக் கட்டணம் ரூபா 7,201,200 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் ரூபா 2,443,260 மாத்திரம் ஒதுக்கப்பட்டமையால் குறை ஒதுக்கீடுகள் ரூபா 4,757,940 ஆகும். | 2022 ஆம் ஆண்டின் போது சரியாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும். | இந்த தவறை சரிசெய்து எதிர்வரும் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | முற்பண கொடுப்பனவு உறுதிச்சீட்டின் மூலம் வழங்குனர்களுக்கு முற்பணம் செலுத்தப்பட்டதன் பின்னர் முற்பணத்தை தீர்த்துவைக்கும் மிகுதிப் பணத்தை செலுத்துவதற்கு கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரித்து மொத்த செலவினம் கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரிக்காத 138 நாட்குறிப்புக்களின் மூலம் ரூபா 56,881,303 முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது. மேலும் அந்த நாட்குறிப்புக்களாக தயாரிக்கப்பட்ட 138 நாட்குறிப்பு | முற்பணத் தொகையினை விட மேலதிகமாக தொகை செலுத்தப்பட்டிருக்குமாயின் அதற்காக தனியான உறுதிச்சீட்டு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் முற்பணத் தொகையின் இறுதி கொடுப்பனவு தொகைக்கு சமமாக இருக்குமாயின் மீண்டும் உறுதிச்சீட்டு தயாரிக்கப்படாதிருந்தமை. | முற்பணத் தொகை மொத்த செலவினத்தை விட குறைவாக அல்லது சமமாக இருக்க வேண்டிய போதிலும் கொடுப்பனவு உறுதிச்சீட்டு தயாரித்தல் தேவையானதாக இருந்தது. சகல நாட்குறிப்பு |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிச்சீட்டுக்கள் மற்றும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் தவறை சரிசெய்வதற்கும் மற்றும் சீராக்கங்களை மேற்கொள்வதற்கும் தயாரிக்கப்பட்ட ரூபா 1,028,672,220 தொகையான 950 நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | | பதிவுகளும் முறையான அங்கீகாரத்தின் கீழ் வைக்கப்பட வேண்டியதுடன் உரிய உறுதிச்சீட்டுக்கள் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத் தரால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட உற்பத்தி கணக்கின் பிரகாரம் உற்பத்திக் கிரயம் ரூபா 630,629,340 ஆக இருந்த போதிலும் தயாரிக்கப்பட்ட உற்பத்திக் கிரய அறிக்கையின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்திக் கிரயத்தின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட மொத்த உற்பத்திக் கிரயம் ரூபா 496,877,858 ஆனமையால் வேறுபாடு ரூபா 133,751,482 ஆகும். இந்த கிரயத்தின் மாற்றங்கள் தொடர்பாக பரிசோதனையின்றி உற்பத்திக் கிரய அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அலகு உற்பத்திக் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு மருந்துகளின் உற்பத்தி விலை தீர்மானிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினால் மூலப்பொருளின் விலைகள் உயர்வடைந்து சென்றமையின் காரணமாக உற்பத்திக் கிரயம் அதிகரித்தமை மற்றும் ஆண்டின் இறுதியில் பூர்த்தி பொருட்களின் கிரயம் கணிப்பிடப்பட்டு அதன் அடிப்படையில் விற்பனை விலை தீர்மானிக்கப்படுகின்றது. | உற்பத்திக் கணக்கின் பிரகாரம் இனங்காணப்பட்ட உள்ளபடியான உற்பத்திக் கிரயம் மொத்த உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கையில் உள்ளடக்கப் பட்டுள்ளதாக கருதி அதன் அடிப்படையில் அலகொன்றின் விற்பனைக் கிரயம் மற்றும் விற்பனை விலை தீர்மானிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இழப்பு மற்றும் காலாவதியான பூர்த்தி மருந்துகளில் 133,873 அலகுகளின் மதிப்பீடு செய்யப்பட்ட உற்பத்திக் கிரயம் ரூபா 3,287,088 ஆகும். எனினும் அத்திகதியில் உள்ளவாறான இழப்பீடான இருப்புக்களுக்கான ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா 4,343,168 ஆனமையால் ரூபா 1,056,100 மிகை ஒதுக்கீடுகள் மீளாய்வாண்டின் இலாபத்தில் இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்காக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது இழப்பீடான இருப்புக்களுக்காக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை. | இழப்பீடான மற்றும் காலாவதியான இருப்புக்களின் கிரயத்துடன் ஒப்பிடும் போது அதற்கான ஒதுக்கீட்டுக் கணக்கில் மீதியை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மூலிகை தோட்டங்களிலிருந்து வழங்கப்படுகின்ற உலர்ந்த மூலிகை மூலப்பொருட்களின் கிரயத்தினை | மூலிகை தோட்டங்களிலிருந்து கிடைக்கின்ற உலர்ந்த | மூலிகைத் தோட்டங் களிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | இனங்காண்பதற்கான முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படாதிருந்த துடன் மீளாய்வாண்டின் போது மூலிகைத் தோட்டத்திலிருந்து கிடைக்கின்ற உலர்ந்த மூலிகை மூலப்பொருட்களின் கிலோகிராம் 4,367 மற்றும் மூலிகை மூலப்பொருட்களில் கிலோகிராம் 9,113 ஒரு கிலோகிராம் ரூபா 1 வீதமும், மூலிகை மூலப்பொருட்களில் கிலோகிராம் 5,261 காணப்பட்ட சந்தை விலையின் கீழ் ரூபா 1,076,526 தொகையிலும் ஆக ரூபா 1,090,006 தொகையில் பெறுமதி இடப்பட்டு மூலிகைத் தோட்ட வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மூலப்பொருட்களில் ஒரு கிலோகிராம் ரூபா 1 வீதமும், சில மூலப்பொருட்கள் கூட்டுத்தாபனத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உத்தரவாத விலையை அடிப்படையாகக் கொண்டு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தமை மற்றும் எதிர்காலத்தின் போது இந்த விலைகள் சரியான மதிப்பீட்டுடன் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கப்படுகின்ற மூலிகை மற்றும் உலர்ந்த மூலப் பொருட்களின் கிரயத்தை இனங் காண்பதற்காக தொடர்ச்சியாக பின்பற்றக்கூடிய முறையான திட்ட முறையொன்றை அறிமுகப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | துருப்பிடித்ததன் காரணமாக ஓட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை உள்ளடக்கிய 03 வாகனங்கள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமில்லாத இரண்டு வாகனங்களுக்காக மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வாக ரூபா 362,000 கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | இந்த தவறை சரிசெய்து எதிர்வரும் ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (எ) | ஒரு வருடத்தை விட மேற்பட்ட காலம் முதல் 03 வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக கிடைத்த ரூபா 2,052,823 தொகையை இனங்கண்டு புத்தகங்களுக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 02 வங்கிக் கணக்குகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதும் தேறாத ரூபா 33,592 பெறுமதியான ஒரு வருடத்திற்கு மேற்பட்ட பழைய 05 காசோலைகள் உரிய கடனபட்டோருக்கு வரவு வைத்து வங்கிக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. | இனங்காணக்கூடிய நேரடியாக வங்கிக்கு கிடைத்த மீதிகளை இனங்காண்பதற்கும், மிகுதியை ஏனைய வருமானமாக கணக்கீடு செய்வதற்கும் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஏ) | மருந்துகளை தூளுடன் கலந்து தனியார் மருத்துவர்கள் மற்றும் மருந்து உற்பத்திக் கூடங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்ற கஞ்சா 01 கிலோகிராம் விற்பனை விலை ரூபா 20,000 ஆக இருக்க வேண்டியிருந்தமை விலைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் விற்பனை செய்யப்பட்ட 199.2 கிலோகிராம் கஞ்சாவின் விற்பனை பெறுமதி ரூபா 3,984,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் இலவசமாக கிடைத்த 01 கிலோ கஞ்சாவின் | எதிர்காலத்தில் கஞ்சா கிலோகிராம் அலகு ஒன்றின் விற்பனை விலையை தீர்மானிப்பதற்காக பயன்படுத்தப்பட்ட அடிப்படையை வெளிப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | விசேட கொடுக்கல் வாங்கல் களுக்குரிய போதியளவான மேலதிக தகவல்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப் படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை விலை ரூபா 20,000 ஆக தீர்மானித்தமைக்காக ஈடுபடுத்தப்பட்ட அடிப்படை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஐ) | விற்பனை பிரிவின் விற்பனை அறிக்கையுடன் நிதிப் பிரிவின் விற்பனை அறிக்கையை ஒப்பீடு செய்த போது கடன் விற்பனை மற்றும் காசுக்கு விற்பனை ரூபா 2,030,444 குறைவாகவும், நடமாடும் விற்பனை ரூபா 1,212,278 அதிகரித்தும் கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டில் விற்பனைப் பெறுமதி ரூபா 818,166 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. | கணக்குகள் பிரிவினால் காசு அடிப்படையில் விற்பனைகள் கணக்கீடு செய்யப்பட்டமை மற்றும் கடன் விற்பனைகள் கணக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் விற்பனைப் பிரிவில் ஒட்டுமொத்த விற்பனைகளும் அறிக்கையிடப்பட்டுள்ளது. | விற்பனை வருமானம் அட்டுறு அடிப்படையில் இனங்காணப்பட வேண்டும். நாளதுவரையான விற்பனைத் தகவல்கள் வழங்கலுக்காக விற்பனைப் பிரிவு மற்றும் கணக்கு பிரிவுகளுக் கிடையே தொடர்ச்சியாக உள்ளக தொடர்பையும், தொடர்ச்சியான இணக்க செயற்பாடு களையும் மேற்கொண்டு பொருத்தமான பொறிமுறை யொன்று அறிமுகப்படுத்தப் படல் வேண்டும். |

1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் / அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் முறையே ரூபா 109,665,691 மற்றும் ரூபா 77,871,755 ஆக இருந்த போதிலும் அத்திகதியில் தயாரிக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் காலப்பகுப்பாய்வின் பிரகாரம் மீதிகள் முறையே ரூபா 115,694,386 மற்றும் ரூபா 76,236,566 ஆனமையால் வேறுபாடு முறையே ரூபா 6,028,695 மற்றும் ரூபா 1,635,462 ஆக இருந்தது. இந்த வேறுபாடுகளுக்குரிய காரணங்கள் | இந்த நிலைமையை சரிசெய்வதற்காக கணனி மென்பொருள் முறைமையை நாளதுவரையாக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதி காலப் பகுப்பாய்வின் பிரகாரமான மீதியுடன் இணக்கம் செய்து வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து தேவையான |

| | | |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | சரிசெய்தல்கள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 109,665,691 தொகையான 73 கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 106,667,889 தொகையான 43 மீதிகளுக்குரிய கடன்பட்டோருக்கு மாத்திரம் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதில் ரூபா 83,038,311 தொகையான 33 மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. 06 கடன்பட்டோர் மீதிகளின் புத்தகப் பெறுமதி ரூபா 13,566,348 ஆக இருந்த போதிலும் கிடைக்கப் பெற்ற மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 10,739,172 ஆக இருந்ததுடன் உறுதிப்படுத்தப்படாத மீதி ரூபா 2,827,176 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 88,863,289 தொகையான 69 கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மீதி உறுதிப்படுத்தல் கடிதங்களுக்காக பதில் கிடைக்கப் பெறாமை கட்டுப்படுத்தக் கூடிய நிலைமையில் இல்லாதிருந்தமை மற்றும் மற்றும் மீதி உறுதிப்படுத்தல் பெறுமதிக்கும், புத்தகப் பெறுமதிகளுக்குமிடையே வேறுபாடுகள் உள்ளதாயின் அவற்றை இனங்கண்டு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மீதிகளின் சரியான தன்மை மற்றும் கடனை அறவிடுவதில் உள்ள சாத்தியவளம் தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்த துடன் அதன் விளைவுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 77,871,755 தொகையான 155 கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 51,968,344 தொகையான 86 மீதிகளுக்கு மாத்திரம் மீதி உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. அதில் ரூபா 1,338,800 தொகையான 08 மீதிகளுக்குரிய கடிதங்கள் கடன்கொடுத்தோருக்கு கிடைத்திருக்காததுடன் அந்தக் கடிதங்கள் மீளக் கிடைத்திருந்தது. பதில் அனுப்பப்பட்ட ரூபா 24,083,111 தொகையான 19 கடன்கொடுத்தோர் மீதிகளில் ரூபா 116,965 தொகையான 02 கடன்கொடுத்தோர் களினால் அறவிடுவதற்கு தொகையொன்று காணப்படாதிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் 02 கடன்கொடுத்தோர்களுக்குரிய புத்தகப் பெறுமதி ரூபா 82,842 ஆக இருந்த போதிலும் கடன்கொடுத்தோர் | - மேற்படி - | கடன்கொடுத்தோர் மீதிகளின் சரியான தன்மை மற்றும் கடனை செலுத்துவதில் உள்ள சாத்தியவளம் தொடர்பாக முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ள வேண்டியிருந்த துடன் அதன் விளைவுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்திய மீதி ரூபா 47,088 ஆகும். மேலும் 05 கடன்கொடுத்தோர்களுக்குரிய புத்தகப் பெறுமதி ரூபா 4,300,370 ஆக இருந்த போதிலும் அந்த அளவு ரூபா 9,050,143 ஆக இருந்தமை அந்த கடன்கொடுத்தோரினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 52,153,455 தொகையான 136 கடன்கொடுத்தோர் மீதிகள் மீதி உறுதிப்படுத்தல் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (இ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 21,926,628 தொகையான பூர்த்தியடையாத இருப்புக்கள் மற்றும் ரூபா 1,059,750 தொகையான மிகுதி எரியும் எண்ணெய் இருப்புக்குரிய பௌதீக மெய்மையாய்வு அறிக்கை, 04 வருடங்கள் முதல் மாற்றமின்றி காணப்படுகின்ற தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்டிருந்த ரூபா 15,000,000 கடன் தொகைகளை பரீட்சிப்பதற்காக தேவையான கோவைகள், இலங்கை வங்கி நாணயக் கடித கணக்கில் காணப்படுகின்ற ரூபா 19,310,110 மீதி என்பவற்றை பரிசோதிப்பதற்குரிய தகவல்கள் மற்றும் ரூபா 636,000,000 காணிகளுக்குரிய உரித்தை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்கள் என்பன கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய பதிவேடுகளை விரைவாக கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கு மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்து வதற்காக உரிய தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணங்காமைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 103, 104 | மொத்தக் கிரயம் ரூபா 3,287,068 ஆன இழப்புக்கள் மற்றும் | பற்றாக்குறை மற்றும் குழுவொன்று | மிகை நிதிப் பிரமாணத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் 105 | காலாவதியான இருப்புக்கள் மற்றும் மொத்தக் கிரயம் ரூபா 9,390,293 ஆன இருப்பு பற்றாக்குறை தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் பட்டியலில் மோசடியாக மாற்றம் செய்தல் மற்றும் குறைவாக கணிப்பிடல், மருந்து பெறுவனவுகள் மற்றும் விநியோகித்தலில் மோசடியுடன் இருப்பு பேரேட்டில் உள்ளடக்குதல், மற்றும் விற்பனை செய்யப்பட்ட பணம் குறைவாக வங்கியிலிடல் மூலம் கூட்டுத்தாபனத்தின் இரண்டு விற்பனை நிலையங்களில் இடம்பெற்றுள்ள ரூபா 4,275,076 நிதி மோசடிகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நியமிக்கப்பட்டிருந்தமை மற்றும் அந்தக் குழுவினால் பற்றாக்குறை, மிகை மற்றும் இழப்பீடுகள் தொடர்பான பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்று உரிய பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 396 | விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்கு சமர்ப்பிக்கப்படாத 02 வங்கிக் கணக்குகளில் 06 மாதங்களை விஞ்சிய ரூபா 22,988 பெறுமதியான 04 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | - மேற்படி - |
| (iii) | நிதிப்பிரமாணம் 371 (2) மற்றும் (5) மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | விநியோகிக்கப்பட்ட இடைக்கால கட்டுநிதி செலவினங்களை செய்யாமல் சேமிப்பான மீதி அந்த கட்டுநிதி விநியோகிக்கப்படுகின்ற நிதியாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 28 உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட கூட்டுமொத்தமான ரூபா 337,549 தொகையான 28 உப கட்டுநிதிகள் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.<br>செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய பணிகளுக்கு அண்மித்த தினத்தில் விநியோகிக்கப்பட்டு அந்த பணிகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் அல்லது 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 28 | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்ள முற்பண பெறுமதியில் ஒரு பகுதி தற்போது தீர்க்கப்பட்டுள்ளதுடன் மிகுதியை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர் களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,344,700 தொகையான 148 செயல் நிமித்த உபகட்டுநிதிகள் 11 நாட்களுக்கும் 367 நாட்களுக்கும் இடையிலான காலவீச்சில் தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | நிதிப்பிரமாணம் 387 | வங்கிக் கணக்கிலிருந்து மேலதிகப் பற்று வசதிகள் பெற்றுக் கொள்ளுதல் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் இலங்கை வங்கியில் காணப்பட்ட ரூபா 58,938,165 தொகையான நிலையான வைப்புக்களின் அடிப்படையில் மேலதிக கட்டிட வசதிகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் பெயரில் நடைமுறைக் கணக்கை திறப்பதற்கு பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்ததுடன் அதற்காக 2021 ஆகஸ்ட் 03 ஆந் திகதி ரூபா 200,000 வைப்புச் செய்யப்பட்டு வங்கி நடைமுறைக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | வங்கி மேலதிகப் பற்று வசதிகள் நிறுவனத்தினால் பெறப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை யின் 4 (அ), (இ) மற்றும் (ஈ) பந்திகள் | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நாளதுவரையாக்கப்பட்ட நிறுவகக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் தற்போது இருக்கின்ற பதவியணியினர், வரவு செலவுத் திட்ட முன்மொழிவின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம், கால அட்டவணை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டங்கள் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் திறைசேரி நிதியேற்பாட்டுடன் மூலதன செயற்பாடுகள் மாத்திரம் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலதன செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த துடன் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து நிறைவேற்றப்பட்ட ரூபா 40,867,359 தொகையான மூலதன செயற்பாடுகள் அதில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் 19 தொற்றுநோயின் உச்சளவான காலஎல்லையில் இந்த திட்டங்கள் தயாரிக்கப்பட்டமையால் தகவல்களை பெற்றுக் கொள்ளும் போது ஏற்பட்ட வசதியீனம் மற்றும் பிரச்சினையான நிலைமையில் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமை, உரிய சுற்றறிக்கையின் பிரகாரமும் வரிசை அமைச்சின் மூலமும் வழங்கப்பட்ட வழிகாட்டி மற்றும் மாதிரிகளுக்கு ஒத்ததாக 2022 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் ஆண்டிற்காகவும் உரிய வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2013 செப்தெம்பர் 11 ஆந் திகதிய 02/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை யின் 3.5 ஆம் பந்தி | சேவை பங்களிப்பாளர் ஊழியர் பணிக்கொடை நிதியத்தை பெற்றுக் கொள்வதற்கு தகைமை பெற்ற பின்னர் கூடிய விரைவில் அவருக்குரிய பணத்தை வழங்குவதற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை நிதியமான ரூபா 33,286,336 தொகைக்கு சமமான தொகை முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை | ஊழியர் பணிக்கொடைக்காக தேவையான நிதியாக ரூபா 104,444,914 இலங்கை வங்கியில் நிலையான வைப்பில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது. | ஏனைய காரணங்களின் அடிப்படையில் அகற்ற முடியாத வகையில் ஊழியர் பணிக்கொடை நிதியத்திற்கு சமமான தொகை தனியாக வங்கிக் கணக்கொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் போது உற்பத்தி ஊக்குவிப்பு படியாக ரூபா 52,781,881 தொகை, வருகைப் படியாக ரூபா 5,987,000 தொகை, வினைத்திறன் படியாக ரூபா 12,392,750 தொகையும் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 71,161,631 தொகையினையும் உள்ளடக்கி கடந்த 07 வருடங்களின் போது ரூபா 546,141,514 தொகை பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி ஊக்குவிப்பு படியாக செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் இணங்குவதுடன் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தை பெற்று ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்தமை மற்றும் தற்போது புதிய ஊக்குவிப்பு முறையொன்றை தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்கும் உள்நாட்டு மருத்துவ மேம்படுத்தல், கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி மற்றும் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சின் பரிந்துரையுடன் திறைசேரியின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரத்தை பெற்று ஊக்குவிப்பு படி முன்மொழிவு திட்டத்தின் அடிப்படையில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும். |
| (உ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் வழிகாட்டி | ஆகக்குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளின் பட்டியலை தயாரித்து பிரதான பெறுகைகள் திட்டமும், ஒவ்வொரு பெறுகைகளின் ஆரம்பம் முதல் இறுதி வரையான ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளினதும் படிமுறைகள் ஒழுங்குமுறையாக விபரமிடப்பட்டு பெறுகைக்கால அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகைக் கால அட்டவணை தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டி களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 14,500,336 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,104,391 ஆகும். அதன் பிரகாரம் நிதிவிளைவுகளில் ரூபா 20,604,727 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விற்பனை ரூபா 123,918,897 இனால் அதிகரித்திருந்த போதிலும் விற்பனைக் கிரயம் ரூபா 121,991,469 இனால் அதிகரித்தமையால் நிலையான வைப்புக்களின் அடிப்படையில் நிதி வருமானம் ரூபா 9,315,848 இனால் குறைவடைந்தமையும், தாபன மற்றும் நிர்வாகச் செலவினம், விற்பனை மற்றும் விநியோகச் செலவினங்கள் முறையே ரூபா 17,810,301 இனாலும், ரூபா 3,290,970 இனாலும் அதிகரித்தமை இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாகும்.

2.2 பிரமான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் 18.32 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதும் விற்பனைக் கிரயமும் 25.85 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது. ஏனைய வருமானம் 52.01 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் நிதி வருமானம் 79.39 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதம் 4.44 சதவீதத்தினாலும், தேறிய இலாப விகிதம் 2.71 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உற்பத்தி செய்யப்பட்ட மருந்து வகையின் அடிப்படையில் நிறையிடப்பட்டு உரிய உற்பத்தி அலகில் அதிகரிப்பின் அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட ஊக்குவிப்பு படி உற்பத்தி செயற்பாடுகளுக்காக நேரடியாக பங்களிப்பு வழங்குகின்ற ஊழியர்களுக்காக அமுல்படுத்துவதன் மூலம் நிறுவனத்தின் வினைத்திறனை கட்டியெழுப்பக்கூடிய வகையிலாக இருந்த போதும் அவ்வாறான முறைமைக்கு பதிலாக ரூபா 15 மில்லியனை விஞ்சுகின்ற மாதாந்த உற்பத்திக் கிரயத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் சகல பிரிவுகளினதும் ஊழியர்களுக்கு மாதாந்தம் ரூபா 03 மில்லியனுக்கும் ரூபா 07 மில்லியனுக்கும் இடையிலான தொகை உற்பத்தி ஊக்குவிப்பு படியாக | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் ஊக்குவிப்பு படி செலவினம் அதிகரித்திருந்த போதிலும் அதற்கு வருடாந்த உற்பத்தியின் அதிகரிப்பு தாக்கமளித்திருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் ரூபா 367 மில்லியன் தொகையான மொத்த உற்பத்தி 2021 ஆம் ஆண்டின் போது ரூபா 473 மில்லியன் வரை உயர்வடைந்து சென்றிருந்தது. | முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது உற்பத்திக் கிரயம் 26.25 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும் உற்பத்தி அலகுகளின் அதிகரிப்பின் வீதம் 5.86 சதவீதம் மாத்திரம் ஆகும். அதன் பிரகாரம் உற்பத்திக் கிரயத்தின் அடிப்படையில் அல்லாமல் உரிய |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டில் ரூபா 33,597,472 தொகையான இந்த ஊக்குவிப்பு படி செலவினம் மீளாய்வாண்டின் போது ரூபா 52,781,881 வரை 57 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் உற்பத்திக் கிரயம் உயர்வடைந்து செல்கின்ற சந்தர்ப்பங்களின் போது கூட்டுத்தாபனத்தின் இலாபத் தன்மை குறைவாக இருந்த போதிலும் செலுத்தப்பட்ட உற்பத்தி ஊக்குவிப்பு படி அதிகரிப்பதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தது. | | உற்பத்தி அலகு அளவின் அதிகரிப்பின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட ஊக்குவிப்பு படியொன்று உற்பத்தி செயற்பாடுகளுக்காக நேரடியாக பங்களிப்பை வழங்குகின்ற ஊழியர்களுக்காக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்து நிறுவனத்தின் வினைத்திறனின்மையை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | களஞ்சியத்தில் முறையாக இருப்பு களஞ்சியப்படுத்தப் படாதிருந்ததுடன் ஆகக்கூடிய மற்றும் ஆகக்குறைந்த மற்றும் மீள்கட்டளையிடும் இருப்பு மட்டங்கள் பேணிச் செல்லப்படாதிருந்தமையும், மெதுவாக அசைவுறும் இருப்புக்களை இனங்கண்டு கொள்வதற்கும் மற்றும் விற்பனை மேம்படுத்தல் உபாய திட்டங்கள் பயன்படுத்தப் படாதிருந்தமையும் மருந்துகளின் விலைகள் அதிகரித்தமை, லேபள் மற்றும் பொதியிடல் மங்கலாகுதல் போன்றவற்றின் காரணமாக விற்பனையில் இருந்து அகற்றப்பட்ட மருந்து வகைகளை காலாவதியான மருந்துகளுடன் சேர்க்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த மையும் இந்த இருப்புக்களை மீண்டும் லேபள் இட்டு விற்பனை செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுக்கப்படாதிருந்த மையும், விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சியங்களில் காணப்படுகின்ற காலாவதியான பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத மருந்து வகைகள் நீண்டகாலம் முதல் இருப்பு | இருப்பு மட்டத்தை உச்ச அளவில் பேணிச் செல்லல், விற்பனை முரண்களுக்கு கவனம் செலுத்தி வழங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், உரிய பிரகாரம் பொதியிடல் மற்றும் பதிவேடுகளுக்கு கொண்டுவரல், காலாவதியான இருப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன் விற்பனை நிலையங்களில் காணப்படுகின்ற இடவசதிகளை உச்ச அளவில் பயன்படுத்துவதற்காக ஆயர்வேத மருத்துவ சிகிச்சை நிலையங்களை பேணிச் செல்லல் மற்றும் புதிய மேம்படுத்தல் பதாகைகளை ஈடுபடுத்துதல் மற்றும் இடவசதிகளை வாடகைக்கு வழங்குதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | களஞ்சியம் மற்றும் இருப்பு நிர்வாகத்தை முறைமைப் படுத்தல் வேண்டும். |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புத்தகங்களிலிருந்து அகற்றப்படாமல் வழமையான இருப்பாக கணிப்பீடு செய்யப்பட்டிருந்தமையும், விற்பனை நிலையங்களில் கணிசமான இடஅளவு குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) அனுராதபுரத்தில் அமைந்துள்ள மூலிகைத் தோட்டத்தை அபிவிருத்தி செய்து எல்லை வேலியை நிர்மாணிப்பதற்காக ரூபா 1,808,795 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணி முறையான பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | மதவாச்சி பிரதேச செயலாளரின் 2009 நவம்பர் 18 ஆந் திகதிய அனு/3/5/1/9/1/17 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மூலிகைப் பயிர்ச் செய்கைகளை செய்வதற்காக அந்தக் காணி கூட்டுத்தாபனத்திற்கு கையேற்கப்பட்டுள்ளது. | காணியை முறையான பிரகாரம் கூட்டுத் தாபனத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டிற்கான விற்பனை வருமானம் ரூபா 800,223,256 இனால் ரூபா 575,874,165 அதாவது 72 சதவீதம் அரச துறையின் மூலம் கிடைத்திருந்ததுடன் அதில் ரூபா 224,349,091 அதாவது 28 சதவீதம் மாத்திரம் தனியார் துறையின் மூலம் கிடைத்திருந்தது. தொடர்ச்சியாக கிடைக்கின்ற அரச துறையின் கேள்வி தொடர்பில் உள்ள அதிக கவனத்துடன் சந்தை தேவைகளை சரியான பிரகாரம் இனங்காணாமை, புதிய விற்பனை உபாயத் திட்டங்கள் பயன்படுத்தப்படாமை மற்றும் விளம்பரங்கள் போதியளவில் காணப்படாமையால் தனியார் துறையின் விற்பனை வருமானம் குறைவடைவதற்கு காரணமாக இருந்தது. | விற்பனை பிரிவின் மூலம் திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுடன் சரியான தொடர்பினை பேணிச் சென்று சந்தைப் பங்கினை பாதுகாத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் 25 சதவீத அளவான தனியார் துறையின் விற்பனையை மேம்படுத்துவதற்காக சனநெருக்கடி மிக்க பிரதேசங்களில் விற்பனை நிலையங்களை தாபித்தல், விளம்பர மேம்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், நகரத்தை அண்மித்த மேம்படுத்தல் நடவடிக்கைகளை செய்தல் மற்றும் பத்திரிகை அறிவித்தல், வானொலி அறிவித்தல் மற்றும் விளம்பர துண்டுப் பிரசுரங்களை பகிர்ந்தளித்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் மாவட்ட விற்பனை முகவர்கள் மூலம் நிலையங்களின் விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகளை செயற்திறனாக்கி தனியார் துறையின் விற்பனையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுகின்றது. | தனியார் துறையின் விற்பனை வருமானத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் தமது சந்தை பங்கை தீர்மானிப்பதற்காக காலரீதியில் சந்தை ஆய்வொன்று மேற்கொள்ளப் படாதிருந்ததுடன் போட்டியாளர் நிறுவனத்துடன் கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கு குறைவடைதல் அல்லது அதிகரித்தல் ஏற்பட்டிருந்ததா என்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி தொடர்பாக சில சந்தை ஆய்வுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு முடிவடைந்திருந்த போதும் அது தெரிவு பரிசோதனையாக இருந்தமை மற்றும் சந்தைப் பங்கை தீர்மானிப்பதற்கான ஆய்வை மேற்கொள்வதற்குரிய ஆய்வு பத்திரங்கள் மற்றும் ஏனைய அடிப்படை நடவடிக்கைகள் விற்பனைப் பிரிவின் மூலம் தற்போது தயார்படுத்தப்பட்டுள்ளது. | கூட்டுத்தாபனத்தின் சந்தைப் பங்கை தீர்மானிப்பதற்காக, அதனை அபிவிருத்தி செய்வதுடன் புதிய நுகர்வோர் தேவையினை திருப்திப்படுத்தும் வகையில் சந்தை முன்னுரிமையை இனங் காண்பதற்காக சந்தை ஆய்வு மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட வருடாந்த உற்பத்தி திட்டத்தின் பிரகாரம் அரிஸ்ட, ஆசவ, லேப, க்வாத்த, ரச, மோதக, தைலம், சிறப், வட்டிக்கா, சூகுள், கல்க, சூரணம், லேகியம் போன்ற 13 உற்பத்திகளின் கீழ் உற்பத்தி செய்கின்ற திட்டத்தில் வருடாந்த மருந்து உற்பத்தி கிலோகிராம் 88,931 மற்றும் 750 மில்லி லீற்றர்கள் போத்தல்கள் 760,364 ஆக இருந்த போதும், உள்ளபடியான உற்பத்தி கிலோகிராம் 70,081 மற்றும் 750 மில்லி லீற்றர் போத்தல்கள் 482,149 ஆக இருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த உற்பத்தி முறையே கிலோகிராம் 18,850 இனாலும், 750 மில்லி லீற்றர்கள் போத்தல்கள் 278,215 இனாலும் அடைவதற்கு முடியாதிருந்தது. ஆண்டிற்கான உற்பத்தி வேலை திட்டங்கள் 2138 திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பூர்த்தி செய்யப்பட்ட உள்ளபடியான வேலைகளின் அளவு 1396 ஆக இருந்தமையால் 742 வேலைகளின் அளவு பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை எதிர்பார்த்த உற்பத்தி இலக்கை அடைந்து கொள்ளாமைக்கு பிரதான காரணமாக இருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் வேகமாக பரவியமை, நடமாடும் வரையறை விதித்தமை, கூட்டுத்தாபனத்தின் பதவியணியினர் சிலருக்கு கொவிட் தொற்றியமை, போக்குவரத்து பிரச்சினைகள் ஏற்பட்டமையால் பதவியணியினரின் பங்குபற்றல் குறைவடைந்தமை, மூலப்பொருள் சேகரிக்கும் போதும் போக்குவரத்து செய்யும் போதும் வழங்குனர்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டமையால் வழங்கல் நடவடிக்கைகள் தாமதமடைந்தமை போன்ற காரணங்களினால் ஆண்டின் போது திட்டமிடப்பட்ட வேலைகளின் அளவு மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட உள்ளபடியான வேலைகளின் அளவுக்கிடையே வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தது. | முன்னைய ஆண்டுகளின் இயலளவு மற்றும் காணப்படுகின்ற வளங்களின் அளவை கவனத்தில் கொண்டு எதிர்வரும் ஆண்டில் உற்பத்தி திட்டங்கள் தயாரிக்க வேண்டியிருந்த துடன் உற்பத்தி இலக்கை அடைந்து கொள்வதற்காக போதியளவான செயல் முன்னேற்றம் ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஈ) | கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்ட உற்பத்தி திட்டம் மற்றும் விற்பனைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகளை | உற்பத்தி திட்டம் மற்றும் விற்பனைத் திட்டத்தை தயாரிக்கும் போது உரிய பிரிவுகளின் | கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவுகளினதும் |

| | | | |
|---|---|---|---|
| | நிறைவேற்றுகின்ற கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளின் செயற்பணிகளை மதிப்பிடுவதற்காக செயலாற்றல் குறிகாட்டி தாபிக்கப்பட்டு அந்த பணிகளின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. | செயற்பாடுகளை மதிப்பிடுவதற்காக செயலாற்றல் குறிகாட்டி தாபிக்கப்பட்டு மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்பாடுகளின் செயலாற்றலை மதிப்பிடுவதற்கான செயலாற்றல் குறிகாட்டிகளை தாபித்து அந்த பணிகளின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | 1969 மே 11 ஆந் திகதிய இலக்கம் 14853/3 என்ற இலங்கை அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் 07 நோக்கங்களுக்கு இடையே ஆயர்வேத மருந்து வகைகளின் உற்பத்திக்காக தேவையான சுத்தமான பசுநெய்யை உற்பத்தி செய்வதற்கு சுத்தமான பசும்பால் பெற்றுக் கொள்கின்ற பாற் பசுக்களின் பண்ணையொன்றை நடாத்திச் செல்லல், மருந்து வகைகளை தயாரிப்பதற்கு தேவையான தேன்பாணியை உற்பத்தி செய்வதற்கு தேனீக்களை ஏற்படுத்துதல் மற்றும் தேனீக்களை உருவாக்கும் வாழ்விட கைத்தொழிலாக அபிவிருத்தி செய்தல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான மூலிகைத் தோட்டங்களில் தேனீக்களின் பெட்டிகளை தாபிக்கும் போது அந்த நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக இல்லாதிருந்தமை, தேனீக்களுடன் 100 தேனீப் பெட்டிகள் வழங்கப்பட்டு தேனை உற்பத்தி செய்து கூட்டுத்தாபனத்திற்கு கொள்வனவு செய்தல் ஆரம்பிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்ட செயற்திட்டத்திற்குரிய மருத்துவர்கள் தற்போது இனங்காணப்பட்டு இறுதியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் பசுநெய் மற்றும் பசும்பால் பெற்றுக் கொள்வதற்காக மாட்டு பண்ணை ஒன்றை பேணிச் செல்வதற்கு கணிசமான கிரயமொன்று ஏற்படுகின்றமையால் அரச நிறுவனமான மில்கோ நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கத்தை நிறைவேற்று வதற்கோ அல்லது நடைமுறை நிலைமைக்கு இணங்கும் வகையில் நோக்கங்களை திருத்தும் வகையிலோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017, 2018, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மூலதன மானியமாக பொது திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 102 மில்லியனில் ரூபா 54.1 மில்லியன் அதாவது 53 சதவீதம் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்படாமல் வங்கிக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | கூட்டுத்தாபனத்தின் மூலதன செயற்திட்டத்திற்காக பொது திறைசேரியிலிருந்து வழங்கப்படுகின்ற நிதியேற்பாடு தனியான நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டுள்ளமை, அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக | கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிக்கக் கூடிய அத்தியவசிய மற்றும் முன்னுரிமை செயற்திட்டங்களை மாத்திரம் திட்டமிட்டு அந்த திட்டங்களை வெற்றிகரமாக |

| | | | |
|---|---|---|---|
| | | கிடைத்த பணத்தில் அந்தந்த செயற்திட்டத்திற்காக கேள்வி கையளிக்கப்பட்ட தரப்பினருக்கு முற்பணம் செலுத்தப்பட்டுள்ளதுடன் மிகுதி தொடர்ந்தும் நடைமுறைக் கணக்கில காணப்படுகின்றது. | அமுல்படுத்து வதற்காக தேவையான நிதியேற்பாடு மாத்திரம் பொதுத்திறைசேரியிலிருந்து பெறப்படல் வேண்டும். மிகுதியாகக் காணப்படுகின்ற மூலதன நிதியேற்பாடுகள் உரிய செயற்திட்டங்களை மீண்டும் மீளாய்வு செய்து அத்தியவசிய பணிகளை விரைவாக பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நோயாளிகளின் சுவை மருந்து தேவையினை பூர்த்தி செய்தல் மற்றும் நோயற்ற ஆரோக்கிய சமூகத்தை கட்டியெழுப்பும் நோக்கில் ரூபா 38.5 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்துடன் சுவை மருந்து உற்பத்திக் கூடமொன்றை நிர்மாணித்தல் ரூபா 37,000,000 திறைசேரி நிதியேற்பாட்டின் அடிப்படையில் 2018 யூலை 12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2020 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையில் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் நிதியேற்பாடுகளில் 31.4 சதவீதம் அதாவது ரூபா 11,618,072 நிதிசார் செயல்முன்னேற்றம் மற்றும் 25 சதவீத பௌதீக செயல்முன்னேற்றம் அடையப்பட்டிருந்தது. | 2020 பெப்ரவரி மாதம் வரையிலும் நிர்மாணங்கள் சராசரியான பிரகாரம் மேற்கொள்ளல், கட்டிடத்தின் முதலாவது மாடி 11 அடி உயரமாக இருந்த போதிலும் தவறொன்றினால் 9½ அடியாக திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை, நிர்மாணித்தச் செல்கின்ற போது இது அவதானிக்கப்பட்டமை, இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் பொறியியலாளர் முதலாவது மாடியின் உயரம் 450mm இனால் உயர்த்துவதற்கு ரூபா 240,317 மேலதிக வேலைப் பகுதியொன்று பரிந்துரை செய்யப்பட்டிருந்தமை, அந்தக் கட்டணங்கள் ஆலோசனை சேவைக் கட்டணங்களில் குறைத்துக் கொள்வதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தமை, மேலும் கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையினால் கட்டிட நிர்மாணப் பொருட்கள் சந்தையில் விலை எதிர்பாராத வகையில் உயர்வடைந்து சென்றமையால் நிர்மாண நடவடிக்கைகளை செய்து | செயற்திட்டத்தின் மிகுதி செயற்பாடுகளை கூடிய விரைவில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கொள்வதற்கு தடை ஏற்பட்டிருந்தமை மற்றும் செயற்திட்டத்தின் மிகுதி நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |

3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2011 ஏப்ரல் 20 ஆந் திகதிய இலக்கம் 1702/5 என்ற அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் 05 ஆவது பட்டோலையின் பிரகாரம் ஆயர்வேத ஆணையாளர் விநியோகிக்கின்ற சான்றிதழின் அடிப்படையில் ஆயுர்வேதக் கூட்டுத்தாபனத்திற்கு மாத்திரம் சுங்கவரி விடுவிப்பு இறக்குமதியின் கீழ் கூட்டுத்தாபன உற்பத்திக்காக நல்லெண்ணையை உள்ளடக்கிய மூலிகைப் பொருட்கள் சிலவற்றை நேரடியாக இறக்குமதி செய்யக்கூடிய இயலுமை காணப்பட்ட போதிலும் நல்லெண்ணெய் இறக்குமதி செய்து வழங்குகின்ற தனியார் வழங்குனர்களிடமிருந்து அதிக விலையில் நல்லெண்ஔெய் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுத்தாபனம் ரூபா 153,353,412 தொகையில் நல்லெண்ணெயை கொள்வனவு செய்திருந்தது. | தற்போது இறக்குமதி செய்யப்படுகின்ற உலர்ந்த மற்றும் சுவை மருந்துகள் மற்றும் எண்ணெய் வகைகள் நேரடியாக இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதுடன் அந்நிய செலாவணி பிரச்சினை மற்றும் வழங்குனர்களின் கொடுப்பனவு நிபந்தனைகளின் காரணமாக பிரச்சினையான நிலைமை தோற்றியிருந்ததுடன் விரைவாக தேவையினை கவனத்தில் கொண்டு உள்நாட்டு சந்தையில் போட்டி விலைகளின் கீழ் கொள்வனவு செய்வதற்கு ஏற்படுகின்ற சந்தர்ப்பமும் காணப்படுகின்றமை மற்றும் நல்லெண்ணெய் இறக்குமதி செய்தல் தொடர்பாக விசேட கவனம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மருந்து உற்பத்திக்காக ஒப்பீட்டு ரீதியில் குறைவான கிரயத்தின் கீழ் தரத்துடனான உயர் மூலப்பொருட்களை வழங்குவதற்கு சகல சந்தர்ப்பங்களிலும் முயற்சி எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் 120 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,534,490 பெறுமதியான மருந்துகள் இலவசமாக விநியோகிக்கப்பட்டு அவற்றின் கிரயம் ரூபா 579,069 நன்கொடையாக விற்பனை மற்றும் விநியோகித்தல் செலவினங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. 2019 யூலை 08 ஆந் திகதிய 13406 ஆம் இலக்க பணிப்பளார் சபை தீர்மானத்தின் பிரகாரம் விடயப்பொறுப்பு அமைச்சரின் | உற்பத்தி செய்த மருந்துகளை நன்கொடையளிப்பதற்காக அந்தந்த சந்தர்ப்பங்களின் போது அங்கீகாரம் பெற்றிருந்தமை, சில சந்தர்ப்பங்களின் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தமை, இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தி நன்கொடை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பிலான வழிகாட்டி | உரிய பிரகாரம் திட்டமிடப்பட்ட விற்பனை மேம்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் தவிர, விற்பனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட மருந்துகள் உத்தியோகத்தர் களின் தனிப்பட்ட |

| | | |
|---|---|---|
| கோரிக்கை தவிர பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெறப்படாமல் ரூபா 10,000 தொகைக்கு மேற்பட்ட நன்கொடைகளுக்குரிய பணம் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த போதிலும் 14 சந்தர்ப்பங்களின் போது ரூபா 10,000 இனை விஞ்சிய ரூபா 681,680 தொகையான நன்கொடை தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரித்து பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தமை மற்றும் எதிர்காலத்தில் அது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தீர்மானத்தின் அடிப்படையில் தர்ம நடவடிக்கை களுக்காக நன்கொடையாக மற்றும் இலவசமாக விநியோகிக்க முடியாது. விற்பனை தவிர ஏனைய எந்தவொரு வழிகளிலும் மேற்கொள்ளப் படுகின்ற மருந்துகளை அகற்றுதல் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய சரியான திட்ட முறைமை யொன்றை அறிமுகப்படுத்தி பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். அவ்வாறு அகற்றுவதற்குரிய பரிந்துரை, அங்கீகாரம், மேற்பார்வை குறித்துரைத்த ரீதியில் காண்பிக்கப் படுகின்ற பிரகாரம் ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணிச் செல்லப்பட வேண்டும். |

3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்காக 20 நல்லெண்ணெய் வழங்குனர்களிடமிருந்து கூறுவிலை கோரப்பட்டிருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதனை உறுதிப்படுத்தக்கூடிய எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. 2020 ஆம் ஆண்டில் 04 சந்தர்ப்பங்களின் போது கூறுவிலைகள் கோரி 03 வழங்குனர்களிடமிருந்து பல்வேறு விலைகளில் 05 கூறுவிலைகளின் கீழ் ரூபா 35,277,148 தொகையில் நல்லெண்ணெய் கிலோகிராம் 71,660.5 உம், 2021 ஆம் ஆண்டில் 03 சந்தர்ப்பங்களின் போது கூறுவிலைகோரி 02 வழங்குனர்களிடமிருந்து பல்வேறு விலைகளில் 05 கூறுவிலைகளின் கீழ் ரூபா 58,458,394 தொகையில் நல்லெண்ணெய் கிலோகிராம் 86,590.5 உம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக முறையான பிரகாரம் கையளிக்கப்படாமை, செயலாற்றல் பிணை பணம் பெற்றுக்கொள்ளப்படாமை மற்றும் எந்தவொரு வழங்குனரிடமும் உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமை போன்ற முறையற்ற முறைமையின் கீழ் அந்த கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. வழங்குனர்களுடன் முறையான உடன்படிக்கையில் கைச்சாத்திடப்படாமையால் இணங்கப்பட்ட பிரகாரம் இருப்புக்கள் வழங்கப் படாமை, இருப்புக்கள் தாமதமடைந்தமை, இருப்பு வழங்கல் புறக்கணித்தமை, விலை அதிகரித்தல் போன்ற காரணத்தின் அடிப்படையில் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது உற்பத்தி தாமதமடைந்தமை மற்றும் கைவிட வேண்டியிருந்த போதிலும் | கருத்து தெரிவிக்க்பபடவில்லை. | அரசாங்கத்தின் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டிக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உரிய வழங்குனர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்ததுடன் கறுப்பு பட்டியலில் இடவேண்டிய அவ்வாறான வழங்குனருக்கு மீண்டும் கேள்விகள் கையளிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கேள்வி திறத்தல் குழு பெறுகைக்குழு முறையாக நியமிக்கப்படாமை, குறித்துரைத்த நேரத்தின் பின்னர் கேள்வி திறக்கப்பட்டமை, குறித்த நேரத்தின் பின்னர் கிடைத்த 05 கேள்வி விண்ணப்பங்கள் கையேற்கப்பட்டமை, முறையான கேள்வி திறத்தல் அறிக்கை பேணிச் செல்லப்படாமை, 04 வழங்குனர்களிடமிருந்து போதியளவான கேள்வி காப்புறுதி பெற்றுக் கொள்ளப்படாமை, பூரணமற்ற கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு செயலாற்றல் பிணைமுறியின்றி ஒப்பந்த பெறுமதி ரூபா 2,511,343 தொகையான கேள்வி கையளிக்கப்பட்டமை, வழங்குனர்கள் மூன்று பேர்களிடமிருந்து தாமதமாகி செயலாற்றல் பிணை பெறப்பட்டமை, கேள்வி பெறுமதி தொடர்பாக வழங்குனர்களுடன் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமை போன்ற குறைபாடுகள் காணப்பட்ட 28 வேலை வகைகளுக்குரிய மூலிகை மருந்துகளை கொள்வனவு செய்வதற்குரிய ரூபா 22,268,024 பெறுகைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. மேலும் விடய நிபுணர்களினால் தயாரிக்கப்பட்ட கிரய மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கூறுவிலை மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு கூறுவிலை தயாரித்தலை மேற்கொண்டு கூறுவிலை மதிப்பிடப்படாமை மற்றும் வேலைகளின் அடங்கியுள்ள மருந்து வகைகளின் தனிப்பட்ட விலைகளின் பிரகாரம் மதிப்பீடு தெரிவு செய்யப்படாமல் வேலை விடய விலைகளின் கூட்டுமொத்தம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு | முறையாக கூறுவிலைகள் திறக்க வேண்டியிருந்தமை, எதிர்காலத்தில் முறையான கேள்வி திறத்தல் குழு நியமிக்கப்படுகின்றமை, கேள்வி திறத்தல் ஆவணங்கள் முறையாக பேணிச் செல்ல வேண்டியிருந்தமை, கேள்வி திறப்பதற்கு குறித்துரைத்த திகதியில் விசேட விடுமுறை தினம் அல்லது ஏனைய காரணங்களினால் கேள்வி பெட்டியை குறித்துரைத்த நேரத்தில் முத்திரையிடல், எதிர்வரும் அண்மித்த தினத்தில் திறக்கப்பட்ட பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை, கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை மற்றும் பொருளாதாரரீதியிலான நெருக்கடிகளின் காரணமாக பெறுகை நடவடிக்கைகளை மிகவும் பெயரளவில் மேற்கொள்ள வேண்டியிருந்தமை, வழங்குனர்களின் கோரிக்கை மற்றும் பெறுகைகள் சபையின் அங்கீகாரத்துடன் கேள்வி பாதுகாப்பு மற்றும் செயலாற்றல் பிணைகளை தாமதமின்றி பெற்றுக் கொள்வதற்கோ அல்லது அந்த பிணைகளை பெறாமல் அத்தியவசிய மருந்து மூலப்பொருட்களை கொள்வனவு செய்தலோ மேற்கொள்ளப்பட்டமை, அதிக பெறுமதியுடன் பெறுகை நடவடிக்கைகளின் போது இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் உடன்படிக்கை கைச்சாததிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் வேலைகளுக்கான கூறுவிலை கோரும் போது மருந்து மூலப்பொருட்கள் தனித்தனியாக | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக சில வேலைகளில் மருந்து வழங்கல் விலைகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 25 சதவீதம் முதல் 118 சதவீதம் வரை அதிகரித்தமையும் அவதானிக்கப்பட்டது. | கூறுவிலை கோருதல் பிரயோக ரீதியில் இல்லாதிருந்தமை, சகல மூலப்பொருட்களும் ஒரு வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்தல் உற்பத்தி செயற்பாடுகளுக்கு இலகுவாக இருந்தமை, போக்குவரத்து மற்றும் வழங்கல் பிரச்சினைகளினால் மருந்து மூலப்பொருட்களின் விலை அதிகரித்திருந்தமை | |

3.6 மனிதவள முகாமைத்துவம்

---------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்வேறு தொடர்புகளின் அடிப்படையில் முன்னர் தீர்மானித்த நபர்களின் பதவிகளுக்கு நியமித்துக் கொள்வதற்காக ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் நேர்முகப் பரீட்சை சூழலை மாற்றுதல் மற்றும் சில பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் ஏனைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டமை, அந்தந்த பதவிகளுக்குரிய கடமைகளுக்காக பதவியை கவனத்தில் கொள்ளாமல் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டமை, அல்லது கையளிக்கப்படாமை தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டமை, வினைத்திறமை காண் தடைப் பரீட்சை நடாத்தப்படாமல் பதவி உயர்வு மற்றும் சம்பள அதிகரிப்புக்கள் வழங்குதல் போன்ற குறைபாடுகுள் சபையின் மனிதவள முகாமைத்துவம் தொடர்பாக காணப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது | முன்னர் தீர்மானித்த நபர்களின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கோ அல்லது நேர்முகப் பரீட்சை சூழலை மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்காதிருந்தமை, ஆரம்ப சேவை தொகுதிகளில் சேர்க்கப்பட்ட சில ஊழியர்கள் முகாமைத்துவ உதவியாளர் பதவிகளுக்குரிய கடமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டமை, தற்போது இந்த சேவையின் உள்ளபடியான பதவியின் கடமைகளுக்காக மாத்திரம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் வினைத்திறனான தடைப் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. | சகல நியமனங்களுக்கும் உரிய ஆட்சேர்த்தல் நடைமுறைகளுக்கு இணங்க மற்றும் வெளிப்படையை பாதுகாக்கும் வகையில் மேற்கொள்ளப் படல் வேண்டும். குறித்துரைத்த கால எல்லையில் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்கும் குறித்த நடைமுறைகளின் பிரகாரம் மாத்திரம் பதவியர்வுகளை வழங்குவதற்கும், உரிய பிரகாரம் பதவிகளுக்குரிய பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்களை கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டின் போது முகாமைத்துவ சேவைகள் | கூட்டுத்தாபனத்தின் ஆரம்பம் முதல் இதுவரை வினைத்திறமை காண் | உரிய ஆட்சேர்த்தல் |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தினால் 09 சேவைத் தொகுதிகளின் கீழ் கூட்டுத்தாபனத்திற்காக திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சேவைத் தொகுதியின் கீழ் உரிய பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்ட சகல உத்தியோகத்தர்களுக்கும் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை நடாத்தப்படாமல் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்தனர். | தடைப்பரீட்சை நடாத்தப்படாதிருந்தமை, இதுவரை சேவையில் நிரந்தரமாக்கப் பட்டுள்ளவர்கள் உரிய வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றாமை, முறையான வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை நடாத்துவதற்கு தேவையான அடிப்படைச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பதவியணியினரின் அளவு, சேவை எண்ணிக்கை போன்றவற்றை கவனத்தில் கொண்டு அது தொடர்பாக விசேட நிபுணத்துவ நிறுவனத்தின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறையின் பிரகாரம் வினைத்திறமை காண் தடைப் பரீட்சையை உரிய பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தமை காணப்படுகின்ற போதிலும் மீளாய்வாண்டிற்கு கூட்டுத்தாபனம் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பான போதியளவான அனுபவத்துடன் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன் பிரகாரம் ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் நிறுவனத்தின் பணிகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கினை அடைந்து கொள்ள வேண்டிய கட்டங்களும் இலக்கின் அடிப்படையில் அடைதலை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கூட்டுத்தாபனத்தின் பணிப்பொறுப்புக்களுக்குரிய நிலைபேறான அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அந்த இலக்கை அடைந்து கொள்ளல் தொடர்பான மற்றும் நிறுவன இலக்கை அடைந்து கொள்ளும் குறிகாட்டிகள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தி மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் 2022-2026 காலஎல்லையில் உரிய நிறுவன திட்டம் மற்றும் 2022 ஆம் ஆண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது இது தொடர்பாக கவனம் செலுத்துவதுடன் 2023-2027 நிறுவன திட்டம் மற்றும் 2023 இன் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது இது தொடர்பாக கவனம் செலுத்தப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்குரிய இலக்குகள், குறிகாட்டிகளை இனங்காண் பதற்கும் மற்றும் செயல் முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |